பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 04 2025 7 15

<u>தலைப்புச் செய்திகள்–</u>

1. வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கான அறிவிக்கையை மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது.
2. இந்தியா – போர்ச்சுக்கல் இடையே இருதரப்பு தூதுக்குழுவினா் நிலையிலான பேச்சுக்கள் குடியரசுத் தலைவா் திருமதி திரௌபதி முர்மு முன்னிலையில் இன்று நடைபெற்றது.
3. உலகின் கடல்சார் ஆற்றல் மையமாக இந்தியாவை உயர்த்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது என்று மத்திய அமைச்சா் திரு சர்பானந்தா சோனாவால் தெரிவித்துள்ளார்.
4. சிறுபான்மையினருக்கு பிஜேபி-யில் உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவா் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.
5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் சென்னை அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கான அறிவிக்கையை மத்திய அரசு இன்று வெளியிட்டுள்ளது.

இதற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்திருப்பதை அடுத்து இதற்கான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இந்த திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

**[]<<<>>>[]**

குடியரசுத்தலைவா் திருமதி திரௌபதி முர்மு போர்ச்சுக்கல் சென்றுள்ள நிலையில், இந்தியா – போர்ச்சுக்கல் இடையே இருதரப்பு தூதுக்குழுவினா் நிலையிலான பேச்சுக்கள் இன்று நடைபெற்றது.

இரண்டாம் நாளான இன்று அந்நாட்டு நாடாளுமன்றத்தில் திருமதி திரௌபதி முர்முவுக்கு பாரம்பரிய முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னா் அவைத்தலைவா் திரு ஜோஸ் பெட்ரோவுடன் அவா் கலந்துரையாடினார்.

அவருடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமானதாக அமைந்திருந்தது என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினா்களுடன் திருமதி திரௌபதி முர்மு தமது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

இந்தியா – போர்ச்சுக்கல் நாடாளுமன்ற நட்புறவு குழுவையும் குடியரசுத் தலைவா் சந்தித்து பேசினார்.

**[]<<<>>>[]**

புதுதில்லி வந்துள்ள துபாய் பட்டத்து இளவரசா் Sheikh Hamdan Bin Mohammed-வை பிரதமா் திரு நரேந்திரமோடி இன்று சந்தித்து பேசினார்.

இது தொடர்பாக பிரதமா் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளுக்கு இடையேயான அரசியல் பொருளாதார தூதரக உறவுகளில் துபாய் முக்கிய பங்காற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

துபாய் இளவரசரின் இந்திய வருகை, இந்திய - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையே வேரூன்றி உள்ள நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

முன்னதாக வெளியுறவுத்துறை அமைச்சா் திரு ஜெய்சங்கா், பாதுகாப்புத்துறை அமைச்சா் திரு ராஜ்நாத்சிங் ஆகியோா் துபாய் இளவரசா் Sheikh Hamdan Bin Mohammed -வை தனித்தனியாக சந்தித்து பேசினா்.

திரு ஜெய்சங்கா் வெளியிட்டுள்ள பதிவில், இளவரசரின் நேர்மறையான சிந்தனைகள் விரிவான ஒத்துழைப்புக்கு வழிவகுத்துள்ளதாகக் கூறியுள்ளார்.

பாதுகாப்புத்துறை அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உடனான நட்புறவுக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வரும் ஆண்டுகளில் இருதரப்புக்கும் இடையே பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா ஆர்வம் கொண்டுள்ளதா அவர் கூறியுள்ளார்.

வளர்ச்சித் திட்டங்கள், உற்பத்தி, புதுமை கண்டுபிடிப்புகள், தொழில்நுட்பம் ஆகியவற்றில் இணைந்து முயற்சிகளை மேற்கொள்ளவும் இந்தியா ஆர்வம் கொண்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

உலகின் கடல்சார் ஆற்றல் மையமாக இந்தியாவை உயர்த்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது என்று மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்தா சோனாவால் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் கொச்சியில் உள்ள இந்திய கடல்சார் பல்கலைக்கழக வளாகத்தில் மாணவியர் விடுதி மற்றும் நூலக கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டி பேசிய அவர், உலக தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு மற்றும் பயிற்சி சூழலை கடல்சார் பல்கலைக்கழகத்தில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சென்னை, கொல்கத்தா, நவிமும்பை உள்ளிட்ட ஐந்து பலைக்கலைகழக வளாகங்களில் உள்கட்டமைப்பு திட்டங்களையும் திரு சர்பானந்த சோனாவால் காணொலி மூலம் திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

அமெரிக்க விதித்துள்ள புதிய வரிகள் குறித்து முழுமையாக அறிந்த பின்னரே காங்கிரஸ் தரப்பில் கருத்து தெரிவிக்க வேண்டுமென்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்திப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளரிடம் பேசிய அவர், வரி விகிதங்களில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களை தற்போதை வடிவில் ஏற்றுக் கொண்டபின் தெளிவாக ஆராய்ந்த பின்னரே அதனை தொடர்வது குறித்து முடிவெடுக்க வேண்டிய நிலையில் உள்ளதாகக் குறிப்பிட்டார்.

தன்னிச்சையாக எடுக்கப்படும் முடிவுகள் வேறு பாதிப்புகளை ஏற்படுத்தாத வண்ணம் அமைய வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

நிலைமையை மத்திய வர்த்தகத்துறை அமைச்சகம் ஆராய்ந்து வருவதாகவும், அதன் அடிப்படையில் மாற்றங்கள் தேவையெனில் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்றும் திரு ஹர்திப் சிங் பூரி கூறினார்.

**[]<<<>>>[]**

பிரம்ம குமாரிகள் அமைப்பின் ஆன்மீகத் தலைவர் ரத்தன் மோகினி மறைவுக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ஞானத்தையும், அப்புடைமை தத்துவத்தையும் மக்களிடையே வளர்த்தவர் ரத்தன் மோகினி என்று கூறியுள்ளார்.

பிரம்ம குமாரிகள் இயக்கத்தை உலக அளவில் விரிவாக்கம் செய்ய பாடுபட்டவர் என்றும், அவரது போதனைகள் சமுதாயத்தின் அமைதிக்கு வழி வகுத்துள்ளதகாவும் திரு நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.ள

**[]<<<>>>[]**

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் இரண்டு நாள் பயணமாக நாளை தமிழகம் வருகிறார்.

நீலகிரி மாவட்டம் வெலிங்டன் ராணுவ பயிற்சிக் கல்லூரியில் நாளை நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் அவர் பங்கேற்கிறார்.

இதனையொட்டி கோத்தகிரி, குன்னூர் உள்ளிட்ட பகுதிகளில் காவல்துறையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஒடிஸாவை வளர்ச்சியடைந்த மாநிலமாக மாற்றுவதில் பெட்ரோலியப் பொருட்களின் உற்பத்தி பெரும் பங்கு வகிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற ஒடிஸா முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்று அவர் பேசினார்.

இந்த மாநாட்டில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் ஒடிஸாவின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் பெட்ரோலியப் பொருட்களின் உற்பத்தி மையம், கச்சா எண்ணெய் சேமிப்பு கிடங்கை ஒடிஸாவில் அமைத்தல் உள்ளிட்டவை தொடர்பாக ஒடிஸா மாநில அரசுக்கும், இந்தியன் ஆயில் நிறுவனத்துக்கும் இடையே ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்த மாநாட்டில் மத்திய பெட்ரோரலியத்துறை அமைச்சர் திரு ஹர்திப்சிங் பூரி, ஒடிஸா முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி, அரசு மற்றும் தனியார் எண்ணெய் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

**[]<<<>>>[]**

சிறுபான்மையினருக்கு பிஜேபி-யில் உரியஅங்கீகாரம் வழங்கப்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்துள்ளார்.,

சென்னையை அடுத்த நங்கநல்லூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தங்கள் கட்சியில் அதிக அளவில் சிறுபான்மையினருக்கு பதவி வழங்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

வக்ஃப் வாரிய திருத்த சட்டத்திற்கு இஸ்லாமிய பெண்கள் அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளதையும அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தில் ஆளும் திமுக அரசு தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மத்திய அரசை குறை கூறி வருவதாக திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

ஒரு மாநிலம் – ஒரு மண்டல ஊரக வங்கி என்ற கொள்கையின் அடிப்படையில் 26 மண்டல ஊரக வங்கிகள் ஒருங்கிணைக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நிதி சேவைகள் துறை இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய ஒருங்கிணைப்புகளின் மூலம் வங்கிகளின் செயல்திறன் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது 26 மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் 43 மண்டல ஊரக வங்கிகள் செயல்பட்டு வருவதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

22 ஆயிரம் கிளைகளுடன் 700 மாவட்டங்களில் சேவைகளை வழங்கி வரும் இந்த வங்கிகளின் 92 சதவீத கிளைகள் கிராமப்புற மற்றும் நகர்புற பகுதிகளில் அமைந்துள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநிலத்தில் முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை உருவாக்க அம்மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், அடுத்த ஐந்து ஆண்டுகளில் அரசின் அனைத்துத் துறைகளிலும் சமச்சீரான வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு துறையில் மகாராஷ்டிரா முன்னணி மாநிலமாக வளர்ந்து வருவதாகவும் அவர் கூறினார்.

பசுமை தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான தொழில் வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு தேவேந்திர பட்னாவிஸ் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தென்கொரியாவில் வரும் ஜூன் மாதம் மூன்றாம் தேதி அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திற்குப் பின் இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

முன்னாள் அதிபர் திரு யூன் சுக் இயோல் பதவி நீக்கம் செய்யப்பட்டதை அந்நாட்டு நீதிமன்றம் உறுதி செய்ததை அடுத்து தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில் சென்னை அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

பஞ்சாபில் இன்றும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பஞ்சாப் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

முன்னதாக கொல்கத்தாவில் நடைபெற்ற கொல்கத்தா அணிக்கு எதிரான ஆட்டத்தில் லக்னோ அணி ஐந்து ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.